Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மலர் - 35 இதழ் - 6 ஜூன் - 2022

தனிப்பிரதி
ரூ.10/-



## கடந்த 12.06.22 அன்று கர்த்தருக்குக் கீழ்ப்படிந்த நம் ஆவிக்குரிய குடும்பத்து இளம் பிள்ளைகளுடன்...



### ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| குற்றங்களை அறிக்கையிடுதல் | 12 |
| பெண்கள் பகுதி | 16 |
| வாலிபர் பகுதி | 19 |
| சிறுவர் பகுதி | 22 |
| நாம் எவ்வளவு ஆவிக்குரிய... | 24 |
| விரோதிகளை ஏன் தேவன்... | 27 |
| கிறிஸ்து என்னும் மார்க்கம் ... | 30 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

THIRUMARAI AASAAN
S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385
Pleading for the restoration of pure New Testament Christianity
Vol. 35 June - 2022 Issue - 6

ஆசிரியர் உரை

# பரம தேசத்தையே விரும்பினார்கள்

விருப்பம் என்பது எல்லா மனிதர்களுக்குள்ளும் இருக்கின்ற ஒரு பொதுவான குணம். நான் எதையும் எப்பொழுதும் விரும்பின தில்லையென்றோ அல்லது விரும்புவதில்லையென்றோ ஒருவன் சொன்னால் அதை நாம் எந்தத் தயக்கமும் இல்லாமல் அப்படியே ஒதுக்கி விடலாம். எப்படியெனில் விருப்பு, வெறுப்பைக் கடந்தவர்களாக யாருமே இப்பூமியில் இல்லை. ஒருவேளை, விருப்பமானது வயதுக்கேற்ற படியும், தரத்திற்குத் தகுந்தபடியும், சூழ்நிலைக்கு உகந்தபடியும் கொஞ்சம் முன்பின் இருக்கலாமே யொழிய சுத்தமாக இல்லையென்ற நிலை யாருக்குள்ளும் இல்லை. இவ்வுலகை மையமாக வைத்து வாழ்பவர்களுக்குள்ளும் விருப்பம் உண்டு, அவ்வுலகை மையமாக வைத்து வாழ்பவர் களுக்குள்ளும் விருப்பம் உண்டு. ஆனால் அந்த இரண்டு விருப்பங்களுக்குமிடையே ஒரு பெரிய இடைவெளி இருக்கும். அவ்வளவு தான்.

சரி நம்முடைய குடியிருப்பு பரலோகம் (பிலி 3:20) என்று சொல்லும் பவுலடியாருக்குள்ளும் விருப்பம் இருந்தது. ஆம், பிலிப்பியர் 1:23-ல்.. "தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசையுண்டு. அது அதிக நன்மையாக இருக்கும்" என்கிறார். "இன்னும் இதே பவுல், கொரிந்தியருக்குச் சொல்லும்போது,"... "இந்த தேகத்தை விட்டுக் குடிபோகவும், கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்."

[II கொரி 5:8] என்கிறார். இந்த தேவ மனிதன் ஏன் இப்படி விரும்பியிருக்கிறான் என்பதற்கு, தாவீது ராஜா, ஆவியானவரின் துணை கொண்டு கொடுக்கும் விளக்கத்தை கவனியுங்கள். "உம்முடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்தியப் பேரின்பம் உண்டு" என்று [சங் 16:11].

தாவீதால் உரைக்கப்பட்டிருக்கும் இந்த மாபெரும் உண்மை பழைய ஏற்பாட்டுப் பக்தர்கள் மிகச் சிறப்பாக அறிந்து வைத்திருந்துள்ளனர். ஆகவே தான், எபிரெய ஆசிரியர் பரிசுத்த ஆவியானவரின் துணையோடு அவர்களைப் பற்றிய பட்டியலை 11-ம் அதிகாரத்தில் கொடுக்கும்போது, அவர்கள் எதை விரும்பினார்கள் என்றும், எதன்மேல் நோக்கமாயிருந்தார்கள் என்றும் எடுத்துக்கூறுகிறார். "**அதையல்ல அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள் .....**" **என்றும் (11:16)** "**இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்தான்**" [11:26] என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

விசுவாசிகளின் பட்டியலை உள்ளடக்கியிருக்கிற எபிரெயர் 11-ம் அதிகாரத்தை நாம் கவனித்தால் அதில் 16 பேர், பெயர் குறிப்பிட்டு சொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆம், ஆபேல் தொடங்கி, சாமுவேல் மட்டும் பேசப்பட்டிருக்கிறார்கள். அந்தப்பட்டியலைக் கொடுத்த ஆவியானவர் பட்டியலின் ஊடே இரண்டு இடங்களில் நிறுத்தி, சம்மந்தப்பட்டவர்கள் பற்றிக்கொஞ்சம் கூடுதலான விளக்கம் கொடுக்கிறார்.தல் இடம், ஆபிரகாமைப் பற்றிச் சொல்லப்படும் சந்தர்ப்பம். இரண்டாவது இடம், மோசேயைப் பற்றிப் பேசப்பட்டிருக்கும் இடம். இப்பொழுது 16 பேருக்கும் அதிகமான நபர்களைக் கொண்ட பட்டியலில் இந்த இரண்டு பேரைப் பற்றிச் சொல்லுமிடங்களில் மாத்திரம் ஏன் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது என்ற கேள்வி இயல்பாகவே நமக்குள் எழுகிறது. இதுபற்றி புரிந்து கொள்வதற்கு இந்நிருபத்தின் பின்னணியைக் கொஞ்சம் தெரிந்து கொள்வது அவசியம்.

எபிரெயர் நிருபமானது, யூதமார்க்கத்திலிருந்துகிறிஸ்தவத்திற்கு வந்து, பிறகு, தங்கள் இனத்தாரின் துன்புறுத்து தல்களுக்குப் பயந்து, திரும்பவும் யூதமார்க்கத்திற்குப் போய்க்கொண்டிருந்த அல்லது போக எண்ணங்கொண்டிருந்தவர்களுக்காக எழுதப்பட்ட நூல். ஆம், யூத கிறிஸ்தவர்களே, நீங்கள் திரும்பிப் போவது தவறு, திரும்பிப் போக வேண்டாம், மாறாக, நாமெல்லாரும் செத்த கிரியைகளுக்கு நீங்கலாகி பூரணராகும்படி கடந்து போவோம் வாருங்கள் என்று அறைகூவல் விடுக்கிறார். [6:1,2] அது மாத்திரமல்ல, நீங்கள் திரும்பிப்போக நினைக்கும் யூத மார்க்கத்தை காட்டிலும், கிறிஸ்துவின் மார்க்கம் மேலானது என்று எடுத்துரைப்பதே இந்நூலின் பிரதான நோக்கமாகவும் உள்ளது. ஆகவேதான் கிறிஸ்துவும், கிறிஸ்தவமும் எந்தெந்த வகைகளில் **மேலானது** என்று இந்நூலில் அடுக்கடுக்காக விவாதிக்கப்பட்டு, அதற்கான காரணங்கள் அழகாக எடுத்தியம்பட்டிருக்கிறது.

பொதுவாக, யூதர்களுக்கு, தங்களது முன்னோர்களைப் பற்றிய பெருமையும், தங்களுடைய சரித்திரத்தைப் பற்றிய மேன்மையும் எப்போதும் உண்டு. தங்களை மேன்மையாக நினைக்கச் செய்யும் அக்காரியங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதில் எப்பொழுதும் அதிக ஆர்வம் காட்டுவர். முற்பிதாக்கள் மற்றும் மோசே போன்றவர்களைப்பற்றி மிக உயரிய மரியாதை இவர்களுக்கு உண்டு. ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்பதில் இவர்கள் அலாதி இன்பம் அடைவர். [மத். 3:9, லூக். 3:8, யோவா. 8:39].

முற்பிதாக்களில் முதலாமவராகிய ஆபிரகாம் மீதும், பிரமாணங் களின் தந்தையாகிய மோசே மீதும், இவர்களுக்கிருந்த மரியாதை ஆவியானவருக்குத் தெரியாததல்ல. இந்த யதார்த்தத்தை அடிப்படையாக வைத்து, அவர்களுக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லும் படியாகவே விசுவாச வீரர்களின் பட்டியலில், இவர்களி ருவரைப் பற்றிப் பேசும் போது, கூடுதல் விளக்கம் தரப்பட்டுள்ளது. அதன் நோக்கம், உங்கள் ஆபிரகாம், உங்கள் மோசேயுமே பரம தேசத்தை விரும்பி, இனிவரும் பலன் மேல் நோக்கமாயிருந் திருக்கும் போது, நீங்கள் அதைப்பற்றிக் கவலைப்படாமல், “திரும்பிப் போகப் பார்க்கிறீர்களே” இது எப்படி நியாயமாகும் என்று கேள்வி எழுப்பி, தவறை இடித்து காட்டுகிறார். ஆகவே தான் அந்த இரண்டு இடங்களிலும் கூடுதல் விளக்கம் கொடுக்கப் பட்டுள்ளது. எப்படி?

சரி, நமக்கு இம்மாதம் தேவைப்படுவது, ஆபிரகாம் பற்றிச் சொல்லப்பட்டிருக்கும் இடத்திலுள்ள **முதல் விளக்கப்பகுதி**. ஆபிரகாம் மற்றும் சாராள் பற்றி சொல்லப்படுவதற்கு முன்பாகவே விசுவாசத்தினாலே நீதிமான் என்று சாட்சி பெற்ற ஆபேல் பற்றியும் [11:4] விசுவாசத்தினாலே, தேவனுக்குப் பிரியமானவன் என்று பெயரெடுத்த ஏனோக்கு பற்றியும் [11:5] விசுவாத்தினாலுண்டாகும் நீதிக்கு சுதந்தரவாளியான நோவா பற்றியும் [11:7] பேசப்பட்டிருக் கிறது, இம்மாமனிதர்களோடு ஆபிரகாமும், சாராளும் பேசப்பட்டு அதன் பிறகு தான் இவ்விதம் எழுதப்பட்டுள்ளது. “இவர் களெல்லாரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக் கொண்டு பூமியின் மேல் தங்களை அந்நியரும், பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு விசுவாசத்தோடே மரித் தார்கள். இப்படி அறிக்கையிடுகிறவர்கள் சுயதேசத்தை நாடிப் போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள். தாங்கள் விட்டு வந்த தேசத்தை நினை த்தாகளானால், அதற்குத் திரும்பிப் போவதற்கு அவர்களுக்குச் சமயம் கிடைத்திருக்குமே. அதையல்ல, அதிலும் மேன்மையான **பரம தேசத்தையே** விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர் களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிற தில்லை, அவர் களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம் பண்ணினாரே” [11:13-16] என்று

இவ்வசனப்பகுதியை நாம் கவனித்தால், **அவர்களுடைய தேவனென்னப்பட அவர் வெட்கப்படவில்லையென்று சொல்லப்** பட்டிருக்கிறது, ஆம் பரலோகத்தின் தேவன் தன்னை ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவன், யாக்கோபின் தேவன் என்று பல இடங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார். (யாத் 3:6) 16-ம் வசனத்தை கூர்ந்து கவனித்தால், தேவன் ஏன் அவர்கள் தேவனென்னப்படுவதற்கு வெட்கப்படவில்லையென்பதற்கான காரணம் பளிச்சென சொல்லப்பட்டிருக்கிறது. அது, **அவர்கள் மேன்மையான பரம தேசத்தையே விரும்பினார்கள் என்பது.** நாமும் கூட நம்முடைய வாழ்க்கையில் பரம தேசத்தை விரும்புபவர்களாக இருந்தால், தேவன் நம்முடைய தேவனாக இருப்பதோடு. நம்முடைய தேவனென்னப்படுவதற்கு அவர் வெட்கப்படவுமாட்டார். அப்படியானால், பரம தேசத்திற்கான வாழ்க்கை வாழ நாம் ஒவ்வொருவரும் தயாரா? சொல்லுங்கள்.

எபி 11:13-16 வசனப்பகுதியில் பரமதேசத்தை விரும்பிய அவர்கள் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டால், நாமும் நம்மை பரம தேசத்திற்கு ஆயத்தப்படுத்திக் கொள்ள வாய்ப்பிருப்பதால் அவைகள் என்னவென்று இப்பொழுது பார்ப்போம்.

**I-வாக்குதத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல் ......**

பரமதேசத்தை விரும்பிய அம்மாமனிதர்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளும் முதல் பாடம், "அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு நம்பி அணைத்துக் கொண்டார்கள்" என்பது.

ஆபிரகாம் போன்றவர்கள் சரீர வாக்குத்தத்தத்தை அடைந்தார் களா இல்லையா எனப்பார்த்தால், ஒருவகையில் அடைந்தார்கள் என்றும் சொல்லலாம், இல்லையென்றும் சொல்லலாம். எப்படி யெனில் "உன் மனைவியாகிய சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான்" (ஆதி 18:10) என்ற வாக்குதத்தத்தை அவன் அடைந்தான். ஆனால் அதே நேரத்தில் பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப் படும் (ஆதி 12:3) உன் சந்ததியை பூமியின் தூளைப்போலப்பெருகப்பண்ணுவேன் (ஆதி 12:7) என்பன போன்ற வாக்குத்தத்தங்களை அவன் அடையவில்லை.

ஆனால், இப்பகுதியை நாம் கூர்ந்து பார்த்தால், இங்கு சொல்லப்படும் வாக்குத்தத்தங்கள் அடைந்தும் அடையாமலு மிருக்கிற சரீரப்பிரகாரமான வாக்குத்தத்தங்களாக இல்லாமல், **ஆவிக்குரிய வாக்குத்தத்தங்களாகவே தெரிகிறது.**

எப்படியெனில் எபி 11:10-ம் வசனம், ஆபிரகாம்‘‘அஸ்திபாரங்களுள்ளநகரத்திற்குக் காத்திருந்தான்’’ என்று கூறுகிறது. கூடார வாசியான அவன் அஸ்திபாரங்களுள்ள நகரத்திற்குக் காத்திருந்தான் எனில், அந்த அஸ்திபாரங்களுள்ள நகரத்தைப் பற்றிய காரியங்கள் ஏதோ ஒருவகையில் அவனுக்கு வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது என்றே நமக்கு திட்டமாய் தெரிகிறது. நமக்கு கிடைத்திருக்கும் பழைய ஏற்பாட்டடில் அவைகளை நாம் காணமுடியாவிட்டாலும், அவர்கள் புரிந்து கொள்ளும்படியான அளவில் அது வெளிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

ஆகவே தான், அவர்களால் தூரத்திலே அவைகளைக் கண்டு நம்பி அணைத்துக் கொள்ள முடிந்திருக்கிறது. தூரத்திலே என்றால் எவ்வளவு தூரத்திலே அவைகளைக் கண்டு நம்பினார்கள்? நம்பி அதை அணைத்துக் கொண்டார்கள்? இதை விளங்கிக் கொள்வதற்கு தயவு செய்து தொடருங்கள். தாவீது அரசன் ‘‘தேவனுக்கு ஆலயம் கட்ட விரும்பின போது, தேவன் நாத்தானைக் கொண்டு இவ்விதம் சொன்னார். உன் வீடும் உன் ராஜ்யமும் என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும் என்கிறார் என்று’’ (II சா 7:16). அதற்கு தாவீது, ‘‘கர்த்தராகிய ஆண்டவரே இது இன்னும் உம்டைய பார்வைக்குக் கொஞ்சம் காரியமாயிருக்கிறது என்று கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற தேவரீர் அடியானுடைய வீட்டைக் குறித்து, **வெகுதூரமாயிருக்கும்** காலத்துச் செய்தியை மனுஷர் முறைமையாய்ச் சொன்னீரே’’ என்றான். (7:19)

அதாவது, சுமார் ஓர் ஆயிரம் ஆண்டுகளில் இயேசுவைக் கொண்டு நிறைவேறப் போகும் செய்தியை ‘‘வெகு தூரத்துச் செய்தி’’ என்று கூறுகிறான். பழைய ஏற்பாட்டில் ஏராளமான தீர்க்க தரிசனங்கள் இயேசுவைப்பற்றியும் அவர் மூலமாக நடைபெறப் போகும் காரியங்கள் பற்றியும் விபரமாக விளங்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது. விபரமாகச் சொல்லப்பட்டு ஓர் ஆயிரம் ஆண்டு கழித்து நிறைவேறுபவைகளையே வெகுதூரத்துச் செய்தி என்று சொல்லப்பட்டிருக்கும் போது, ஆபேல், ஏனோக்கு, நோவா, ஆபிரகாம் போன்றவர்களுக்கு விபரமாக வெளிப்படுத்தப்படாத **பரமதேசமாகிய பரலோகம்** என்பது ‘‘எவ்வளவு தூரத்துச்’’ செய்தியாக இருந்திருக்குமென்று அப்படியே கொஞ்சம் எண்ணிப்பாருங்கள். அது எவ்வளவு தூரத்துச் செய்தியாக இருந்தாலும் அதை நம்பி, அணைத்துக் கொண்டு பரமதேசத்தை விரும்பி எப்படி வாழ்ந்திருக்கிறார்கள் என்றும் பாருங்கள் நாமும் தான் இருக்கிறோம் ....?!

அருமையானவர்களே! நமக்கு பரமதேசமாகிய பரலோகம் எப்படி வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது? தூரத்துச் செய்தியாகவா? அல்லது வெகுதூரத்துச் செய்தியாகவா? இரண்டுமேயில்லை அது, நாம் எட்டிப்பிடிக்கும் தூரத்துச் செய்தியாகத்தான் நமக்கு சொல்லப் பட்டிருக்கிறது. இயேசுவானவர் "நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்" என்றார். (யோவா 14:3) எப்பொழுது வருவேன் என்று சொல்லிச் சென்றிருக்கிறார்?, "இதோ! சீக்கிரம் வருகிறேன்" என்று சொல்லிச் சென்றுள்ளார்.

இப்பொழுது சொல்லுங்கள், பரலோகம் என்பது நமக்கு தூரத்துச் செய்தியா? பக்கத்துச் செய்தியா? சீக்கிரம் என்பது தூரமா? பக்கமா? நிச்சயமாகவே பக்கம்தான். அப்படியானால், தூரத்திலே கண்டவர்களே, நம்பி அணைத்துக் கொண்டு, பரமதேசத்தை விரும்பி காத்திருந்திருக்கிறார்களென்றால், நாம் எவ்வளவு தூரம் பரலோகத்தை நம்பி அதற்காகக் காத்திருக்க வேண்டுமென்று எண்ணிப்பாருங்கள் உண்மையாகவே, நாம் பரலோகத்தை நம்பி, காத்திருக்கிறவர்களாக உள்ளோமா? உங்கள் பதில் இல்லை யென்பதானால், இது முதலாகிலும், நாம் பரம தேசத்தை நம்பி அணைத்து, அதற்காகக் காத்திருக்கிறவர்களாக இருப்போம்.

**II–அந்நியரும், பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு..**

பரம தேசத்தை விரும்பிய அத்தேவ மனிதர்களிடமிருந்து நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற இரண்டாவது பாடம், "பூமியின் மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு விசுவாசத்தோடே மரித்தார்கள்" என்பது.

பரமதேசமாகிய பரலோகத்தை நாடுகிறவர்களுக்குள்ளாக இருக்க வேண்டிய மிக முக்கியமான குணங்களில் ஒன்று, "இந்த பூமி சதம் அல்ல" என ஏற்றுக்கொள்வது. யாரெல்லாம் இந்த உண்மையை ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்களால் தான் பரலோகத்திற்காக வாழ முடியும் பரலோகத்திற்காக காத்திருக்க முடியும், விசுவாச வீரர்களின் பட்டியலில் வரும் அநேகர் இந்த உண்மையை உணர்ந்தவர்களாகவே வாழ்ந்துள்ளனர். செல்வச்சீமானாக வாழ்ந்த ஆபிரகாம் ஏத்தின் புத்திரரிடத்தில் "நான் அந்நியனும், பரதேசியுமாய் இருக்கிறேன்." (ஆதி 23:4) என்று சொல்லியுள்ளார். இன்னும் எகிப்துக்குச் சென்ற யாக்கோபு பார்வோனிடத்தில் "நான் பரதேசியாய் சஞ்சரித்த நாட்கள் 130 வருஷம் என்றான்" (ஆதி 47:9) மேலும் தாவீது சங் 39:12-ல் "அந்நியனும், பரதேசியுமாய் இருக்கிறேன்"என்கிறான். இந்த எண்ணம் இவர்களது அடிமனதில் ஆழமாக இருந்தபடியால்தான் நிலையான நகரத்திற்குக் காத்திருக்க முடிந்தது.

இக்கருத்தை பரிசுத்த ஆவியானவர், புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களைக் கொண்டும் வலியுறுத்தியிருக்கிறார். “பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும் தேவனால் கட்டடப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம். ஏனெனில் இந்தக் கூடாரத்திலே தவித்து, நம்டைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துக் கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறோம்.” (11கொரி 5:1,2) இன்னும் “நம்டைய குடியிருப்பு பரலோகம்” என்று பிலிப்பி பட்டணத்து சபையாருக்கு எழுதும் போதும் சொல்லப் பட்டிருக்கிறது. நம்டைய எபிரெய ஆசிரியரே கூட, “நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை வரப்போகிறதையே தேடுகிறோம்” என்று கூறியுள்ளார் (எபி13:14)

இந்த பரமபக்தர்கள் செய்த இன்னொரு முக்கிய காரியம் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டதோடு நிற்காமல், விசுவாசத்தோடே மரித்திருக்கிறார்கள். அதாவது, கடைசி மூச்சு வரை தங்களுடைய நம்பிக்கைக்காக, தங்களது எதிர்பார்ப்புக்காக வாழ்ந்திருக்கிறார்கள். எவ்வளவு பெரிய விசுவாசம் பாருங்கள்! மெய்க் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு இப்படிப்பட்ட விவாசம் மிக மிக முக்கியம். நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவால் ‘‘முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்’’ (மத் 10:22) என்றுரைக்கப்பட்ட வார்த்தைகளின் பொருள், அவர் வருவதற்கு சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்த இவர்களுக்கு நன்றாகவே விளங்கியிருக்கிறது.

அன்பானவர்களே ! இப்படிப்பட்ட உண்மைகளை அறிந்தவர்களாக இன்றைக்கு நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தை நடத்திக் கொண்டுள்ளோமா? சிந்தித்துப் பார்ப்போம். நாமும், பரம தேசத்துக்குப் பங்குள்ளவர்களாக மாற வேண்டுமானால், இந்த பூமியின் வாழ்க்கை எப்படிப்பட்டதென்பதைப் பூரணமாக உணர்ந்து கொள்ளவேண்டும். நாமும் விசுவாசத்தோடே மரிக்கத்தக்கதொரு விசுவாச வாழ்க்கை வாழ வேண்டும். அந்த விசுவாச வாழ்க்கை கிரியைகளுடன் கூடியதாக இருக்க வேண்டும். ஏனெனில் கிரியையில்லாத விசுவாசம் செத்தது (யாக் 2:17) ஆம் விசுவாசிக்கிற ஒருவன் தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கிறவனாக இருப்பான். (யோவா 6:28:2,9)

ஆகவே, நம்டைய வாழ்க்கையிலே தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பித்து, இந்த பூமியிலே நாம் அந்நியரும், பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு விசுவாசத்தோடே மரிக்கத்தக்கதானதொரு வாழ்க்கையை நடத்துவோமாக!

### III–தாங்கள் விட்டு வந்த தேசத்தை நினைக்கவில்லை

பரம தேசத்தை விரும்பிய இம்மாமனிதர்களிடமிருந்து நமக்கு கிடைக்கிற மற்றுமொரு பாடம், "தாங்கள் விட்டு வந்த தேசத்தை நினைக்காமல்" வாழ்ந்தார்கள் என்பது.

இன்றைக்கு விசுவாச வாழ்க்கையில் அநேகர் விழுந்து போவதற்குக் காரணமே, தாங்கள் விட்டு வந்த த நினைப்பது தான். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது, "தேமா இப்பிரபஞ்சத்தின் மீது ஆசை வைத்து ....." (II தீமோ 4:10) பிரிந்து போனான் என்கிறார். பிரபஞ்சம் என்றால் உலகம். உலகத்தையும், உலகத்திலுள்ளவைகளையும் விட்டுப் பிரிந்து வந்தவன் மீண்டும் திரும்பிப் பார்த்தால் அவர்கள் நிலை கேடுள்ளதாக மாறிவிடும் அபாயம் உண்டு. (II பேதுரு. 2:20) எகிப்திலிருந்து விடுதலையான இஸ்ரவேல் ஜனங்கள், கானானுக்குள் பிரவேசிக்க டியாமல் விழுந்து போனதற்கு என்ன காரணம்? தாங்கள் விட்டு வந்தவைகளை சதா நினைத்ததுதான். நாம் எகிப்திலேகிரய மில்லாமல் சாப்பிட்ட மச்சங்களையும், வெள்ளரிக்காய்களையும், கொம்மட்டிக்காய்களையும், கீரைகளையும், வெண்காயங்களை யும், வெள்ளைப்பூண்டுகளையும் நினைக்கிறோம். இப்பொழுது நம்முடைய உள்ளம் வாடிப்போகிறது. இந்த மன்னாவைத் தவிர நம்முடைய கண்களுக்கு முன்பாக வேறொன்றும் இல்லையே என்று சொன்னார்கள். (என். 11:5,6) இச்செயல் கர்த்தருக்கு மிகுந்த கோபத்தை உண்டாக்கினது (11:10) ஆம் அவராலே அழைக்கப் பட்டவர்கள் திரும்பிப் பார்ப்பதை தேவன் ஒரு போதும் விரும்புவதில்லை .

அதுமாத்திரமா நம்மெல்லாருக்கும் நன்கு தெரிந்த லோத்தின் மனைவி எப்படி? "மலைக்கு ஓடிப்போ" என்ற தேவன் வார்த்தைக்குச் செவி கொடாமல் அந்த ஊருக்குப்போகிறேன் என்று கேட்டு அதையும் தேவன்சொல்லியபடி செய்யாமல், திரும்பிப் பார்த்து "உப்புத்தூண் ஆனாள்" (ஆதி19:26விட்டு வந்ததைத் திரும்பிப் பார்த்ததால் வந்த வினை அவளை மட்டும் பாதிக்காமல், அவளுடைய பிள்ளைகள் இரண்டு பேருக்கும் சாபமாகவும் மாறியது (ஆதி 19:33–36) விட்டு வந்தததைத் திரும்பப் பார்ப்பதின் பயங்கரம் உங்களுக்கு விளங்குகிறதா இல்லையா?

ஆனால், இந்த ஆபிரகாமோடு சேர்ந்த அந்த ஆதிப்பிதாக்கள் தாங்கள் விட்டு வந்த காரியத்தில், மிகவும் கவனமாகவும், எச்சரிப்பாகவும் இருந்தார்கள். ஆம், தன் மகன் ஈசாக்குக்குப் பெண் பார்த்த போது, தன் வேலைக்காரனிடம் என்ன சொல்லுகிறான் பாருங்கள்.

“அதற்கு ஆபிரகாம், நீ என் குமாரனை” மறுபடியும் அங்கே அழைத்துப் போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு (ஆதி 24:6) என்றான். கர்த்தர் என் மகனுக்குப் பெண்ணைக் கொடுப்பார். அப்படி கொடாவிட்டாலும் என் மகனை மாத்திரம் நான் விட்டு வந்த தேசத்துக்கு அழைத்துக் கொண்டு போக வேண்டாம் என்று உறுதிபடக் கூறினான். இப்படிப்பட்ட உறுதிதான் ஒவ்வொரு கிறிஸ்தவனிடம் இருக்க வேண்டுமென்று இயேசுவானவர் போதித்துள்ளார். இவ்வசனத்தைக் கவனியுங்கள் “அதற்கு இயேசு கலப்பையின் மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியானவன் அல்ல என்றார்” (லூக் 9:62) பின்னிட்டுப் பார்ப்பதை வேதாகமம் எப்பொழுதும் எதிர்த்தே வந்திருக்கிறது.

அன்பான தேவப் பிள்ளையே, நாம் மேலே பார்த்த காரியங்களில் நாம் ஒவ்வொருவரும் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? நாம் பாவத்திற்கு மரித்து கிறிஸ்துவுடனே கூட எழுந்தது உண்மையானால் பூமியிலுள்ளவைகளைத் தேடாமல் மேலானவைகளைத் தேடுகிறவர்களாகவே இருக்க வேண்டும். (கொலோ 3:1,2)

ஆனால், நாம் அப்படி இருக்கிறோமா? பரமதேசமாகிய பரலோகம் நமக்குச் சொந்தமாகவேண்டுமென்று விரும்புகிற நாம், அந்த ஆதி பக்தர்களைப் போல, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை நம்பி அணைத்துக் கொண்டு, இப்பூமியில் அந்நியரும், பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விட்டு வந்த பாவமான காரியங்களை ஒரு போதும் நினையாமல் முடிவு பரியந்தம் விசுவாசத்தில் உறுதியாயிருப்போமாக! ஆமென்.

---

**இயேசுவின் சீஷர் எப்படி இருக்க வேண்டும் :**

1. தேவனையும் இயேசுவையும் அறிந்திருக்க வேண்டும் – (யோவான் 17:3)
2. பிரபஞ்சத்திற்கு ஒத்தவேஷம் தரிக்க கூடாது– (ரோமர் 12:2)
3. தன் வாழ்க்கையில் தேவனுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் – (மத்தேயு 6:33)
4. மேலானவைகளை நாடவேண்டும் – (கொலோ 3:2)
5. ஆவியின் கனிகளை கொடுக்க வேண்டும் – (கலாத்தியர் 55:22,23)

# குற்றங்களை அறிக்கையிடுதல்

Bro. J.C. சோட்

இவ்வுலகில் ஒருவர் தான் செய்வதற்குக் கடினமான காரியம், நான் பாவம் செய்துவிட்டேன் என்று ஒத்துக்கொள்வது தான். நாம் வேதாகமம் முழுவதும் வாசித்தாலும் கூட, நான் பாவம் செய்தேன் என்று சொல்லுவதற்கு ஒரு சிலருக்குத் தான் தைரியம் இருந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, அந்த நாளிலிருந்து இந்த நாள் வரை, மனித இனம் பாவத்தை ஒத்துக் கொள்ளுகிற காரியத்தில் பெரிய அளவில் மாற்றமில்லை. மனிதன் பாவியாக இருக்கிறபடியால் எப்போதுமே தன் பாவத்தை நேர்மையாக அறிக்கையிட முடியும். இது கிறிஸ்தவரல்லாதவர்களுக்கு மட்டுமல்ல கிறிஸ்தவர்களுக்கும் உண்மையாயிருக்கிறது.

ஒருவர் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து கிறிஸ்தவரான பிறகு, அவர் தேவனுக்கு உண்மையுள்ளவராயிருக்க வேண்டும். இதன் பொருள், ஒருவர் பாவமே செய்யாமல் பரிபூரணமான வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதல்ல, மாறாக, ஒருவர் தன்னுடைய அழைப்புக்கு தன்னால் முடிந்தவரை உண்மையாயிருக்க வேண்டும். இப்படி ஒருவர் செய்வதின் மூலமாக அவர் ஒளியிலே நடக்கிற பிள்ளையாகக் காணப்படுவார். ஆம். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களிலுமிருந்தும் அவரைச் சுத்திகரித்திருக்கிறது (Iயோவான் 1:7). ஆனாலும், எல்லோரும் உண்மையாயிருப்பதில்லை. அவர்கள் விழுந்து போகிறார்கள், மறுபடியும் திரும்புகிறார்கள், திரும்பவும் தவறுகிறார்கள். அதாவது, அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருந்து கொண்டே தொடர்ந்து பாவம் செய்கிறபடியால் இழந்து போகிறார்கள். மேலும், தங்களுடைய மோசமான முன்னு தாரணத்தின் மூலமாகக் கர்த்தருடைய சபைக்கு மிகப்பெரிய சேதத்தை ஏற்படுத்தி விடுகிறார்கள். இக்காரியத்தில் என்ன செய்ய வேண்டும்?

தேவனிடத்தில் முழுமையாகத் திரும்பாதவர்கள், ஆதியில் கொண்டிருந்த அன்பை புதுப்பித்துக் கொள்ளவும், தங்கள் பாவங்களை உணரத்தக்கதாகவும் வேதவசனத்தின்படி அவர்களிடமிருந்து ஐக்கியத்தை விலக்கிக்கொள்ள வேண்டும். (I கொரி.5; மத்.18:15-17). மேலும், தேவனிடத்தில் திரும்பக் கொண்டு வருவதற்கான எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும். தவறி ழைத்தவர்கள் தேவனிடத்தில் மனந்திரும்புவதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும்.

பாவத்திலிருக்கும் ஒருவர் தான் மீட்கப்பட வழிமுறைகள் உண்டென்று அறிந்து கொள்வது ஓர் அலாதியான காரியம். ஆனால், ஒருவர் ஒருமுறை இரட்சிக்கப்பட்டால், அவர் எப்போதுமே இரட்சிக்கப்பட்ட நிலையிலேயே இருக்கிறார் என்று வேதாகமம் போதிக்கவில்லை. மேலும், ஒருவர் கிறிஸ்துவை விட்டு விலகிச்சென்றால், அவர் என்றும் இழந்த நிலையிலேயே இருக்கிறார்=என்றும் வேதாகமம் போதிப்பதில்லை. ஒருவன் பாவஞ் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராக இருக்கிறார் என்னும் வசனம் தேவன் மனிதன் பாவஞ்செய்கிறதை ஊக்கப்படுத்துவதில்லை. மாறாக, மனிதன் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்கு முழுச்சுதந்திரத்தையும் கொடுத்திருக்கிறார். அதாவது மனிதன் மனந்திரும்பி தேவனிடமாகத் திரும்புவதற்கு தேவன் அதிகமான வாய்ப்புகளைக் கொடுக்கிறார். இது உண்மையாயிருக்கிறபடியால், ஒருவர் தேவனுடைய நீடிய பொறுமைக்காகவும், கிருபைக்காகவும், இரக்கத்திற்காகவும் அவருக்கு முன்பாக எப்போதும் நன்றியுடையவராக இருக்க வேண்டும். ஆம், லூக்கா 15 – ல் இடம் பெற்றுள்ள கெட்ட குமாரன் சம்பவத்தை வாசித்துப் பாருங்கள்.

நிச்சயமாகவே, கர்த்தர், நாம் யாரும் பாவத்திற்குச் திரும்பிச் செல்வதை விரும்புவதில்லை. ஒருவேளை, அப்படியொருவர் செய்தால், பாதுகாப்பின் இடத்திற்குத் திரும்புவது கடினமான காரியமாகும் எனவே, ஒருவர் பின்மாற்றமடைந்தால், தவறு செய்தால், பாவத்தில் தொடர்ந்து நிலைத்திருநதால் அவர் தேவனிடத்திலிருந்து விழுந்துவிட்டார் என்று தான் பொருள். அவர் தொடர்ந்து அப்படியே இருந்தால் தான் ஆத்துமாவை இழந்து போன நிலையிலேயே இருப்பார்.

ஒருவர் கர்த்தரிடத்தில் உள்ள பாதுகாப்பிற்குத் திரும்ப வேண்டுமென்றால், அவர் சில காரியங்களைச் செய்ய வேண்டும். முதலாவது, ஒருவர் தன்னுடைய பாவத்திலிருந்து உண்மையாக மனந்திரும்ப வேண்டும். இது சம்பந்தமாக நமக்கு கெட்ட குமாரன் வாழ்க்கை மாத்திரமல்ல முதலில் தேவனுக்குத் கீழ்ப்படிந்து விட்டு, பின்பு தேவனுடைய வரத்தை பணத்தினால் வாங்க முயற்சித்து பாவஞ்செய்த மாயவித்தைக்காரனாகிய சீமோனுடைய வாழ்க்கையும் உண்டு. பேதுரு அவனை நோக்கி தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக்கொள்ளலாமென்று நீ நினைத்த படியால் உன் பணம் உன்னோடே கூட நாசமாய்ப் போகக்கடவது. உன் இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையாயிராதபடியால், உன் துர்குணத்தை விட்டு மனந்திரும்பி தேவனை நோக்கி வேண்டிக் கொள்; ஒரு வேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம். நீ கசப்பான பிச்சிலும் பாவக்காட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன் என்றான். அதற்குச்

சீமோன்; “நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரி டாதபடிக்கு, எனக்காகக் கர்த்தரை வேண்டிக் கொள்ளுங்கள் என் றான்.” (அப்.8:20-24). இந்த வசனப்பகுதியில், நாம் தேவனிடத் தில் திரும்ப வேண்டுமென்றால், பாவங்கள் அனைத்தையும் விட்டு விட்டுத்தான் தேவனிடத்தில் திரும்ப வேண்டுமென்று நாம் காண் கிறோம்.

அடுத்ததாக, ஒருவன் தன்னுடைய குற்றங்களை அறிக்கை யிட வேண்டும். யாக்கோபு ஆசிரியர் “நீங்கள் சொஸ்தமடை யும்படிக்கு உங்கள் குற்றங்களை அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்” (யாக்.5:16) என்று சொல்லியிருக்கி றார். ஆம். ஒருவர் தன் பாவங்களை ஒத்துக் கொள்ளவும், அறிக் கையிடவும் ஆயத்தமாயிருக்க வேண்டும். அதாவது, ஒருவர் தன் னுடைய ஒவ்வொரு பாவத்தையும் பட்டியலிட வேண்டுமென் றில்லை. ஒரு குறிப்பிட்ட நபர் என்ன பாவம் செய்தார் என்பது அவருக்குத் தெரியும். அதே போல், யாரிடத்தில் இவர் அறிக்கையி டுகிறாரோ அவருக்கும் இவரைப் பற்றித் தெரியும். எனவே, பாவம் செய்தவர், நான் இன்று பாவம் செய்துவிட்டேன். ஆகையால், எனக்கு மன்னிப்புத் தேவை என்று சொன்னால் அதுவே போதுமா னது. பொதுவாக நாம் பார்க்கும் போது, ஒருவர் பாவம் செய்திருக்க வேண்டும் அல்லது செய்யாமலிருக்க வேண்டும். இந்த, இரண்டில் ஒன்றுதான் சரி. இடையில் ஒன்றுமில்லை. இங்கே ஒருவர் தன்னு டைய பாவங்களை அறிக்கையிடும் போது அதை நேர்மையாகச் செய்ய வேண்டும்.

நிறைவாக, ஒருவர் தேவனுடைய மன்னிப்பைப் பெற ஜெபம் ஏறெடுக்க வேண்டும். இதை நாம் மாயவித்தைக்காரனாகிய சீமோனுடைய சம்பவத்திலும், யாக்.5:16 - ம், வசனத்திலும் காண முடியும். இப்படிச் செய்வதன் மூலமாக, தவறிழைக்கும் ஒரு கிறிஸ்தவன் திரும்பவும் ஓர் உண்மையுள்ள கிறிஸ்தவன் என்ற மேலான நிலைக்குத் திரும்ப முடியும். இதற்குப் பின்பு அவர் சபை யால் மன்னிக்கப்பட்டு முழு ஐக்கியத்தாலும் ஏற்றுக் கொள்ளத் தகுதியுடைய நபராக மாற்றப்படுகிறார்.

இப்போது, ஒருவர் செய்யும் பாவம் எவ்வளவு வெளிப்படையா னது என்பதை நாம் கவனிப்போம். ஒருவர் செய்யும் பாவம், அவ ருக்கும் தேவனுக்கும் மாத்திரம் தெரிந்திருக்கும் பட்சத்தில் அவர் தேவனோடு ஒப்புரவானால் அதுவே போதுமானது. இந்தக் காரியத் தில் வேறு யாரும் இடைப்பட வேண்டிய அவசியமிருக்காது. அடுத்து, ஒருவர் தன்னுடைய சகோதரனுக்கு விரோதமாகப் பா வஞ்செய்தால், பாவம் செய்தவர், பாதிக்கப்பட்டவர், தேவன் இவர் களுக்கிடையே இப்பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும்.

எல்லோருக்கும் தெரியப்படுத்த வேண்டியதில்லை. முடிவாக, ஒருவர், வெளிப்படையாக எல்லோருக்கும் முன்பாகப் பாவஞ்செய்தால், அது சபைக்கு முன்பாக எடுத்துச் செல்லப்படுகிறது. பாவஞ்செய்தவர் சபையார் எல்லோரும் அறியதக்க வகையில் தன் பாவத்தை எல்லோருக்கு முன்பாகவும் அறிக்கையிட்டு தன் தவறைத் திருத்திக் கொள்கிறார். அதாவது, தான் செய்த பாவம் எல்லோருக்கும் தெரிந்திருக்கிறபடியால், பாவஞ்செய்த நபர் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனே எடுக்க வேண்டும்.

நீங்கள் பாவம் செய்கிற கிறிஸ்தவராக இருந்தால், உங்களுக்கு வாய்ப்பு இருக்கும் போதே கர்த்தரிடத்தில் திரும்புவீர்களா? ஏனென்றால், உங்களுடைய விலையேறப்பெற்ற ஆத்துமாவின் நலன் கருதியும், பரிசுத்தமான சபையின் நலன் கருதியும் நீங்கள் இதைச் செய்ய வேண்டும் இறை மாண்புடன். உண்மை விசுவாசிகள். ஆம், இப்படிப்பட்டவர்கள் கர்த்தரிடத்தில் திரும்பும்படியாக ஜெபிக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக தேவன் உங்களை மனந்திரும்பும்படியாக அழைத்து மன்றாடுகிறார்.

✍

---

**வர்த்திக்க பண்ணுவார் :**

1. உங்கள் விசுவாசத்தை – ( லூக்கா 17:5 )
2. உங்கள் நீதியின் விளைச்சலை – ( 2 கொரி 9:10 )
3. உங்கள் பிள்ளைகளை – ( சங்கீதம் 115:14 )
4. உங்களுக்கு உண்டான எல்லாம் – ( உபா 8:13 )

**பத்மூ தீவு பற்றி :**

1. அர்த்தம் – ஏரமலைத் தீவு
2. சமோஸீக்கு தெற்கே 20 மைல் – ( 32 K.M தூரம் )
3. ஆசியா மைனருக்கு மேற்கு 24 மைல் – ( 38 K.M தூரம் )
4. இத்தீவு – 10 மைல் நீலம், 6 மைல் அகலம் – ( 16 X 10 KM )
5. இத்தீவு மிகவும் பாறை மற்றும் கரடு முரடான நிலப்பரப்பை கொண்டது.

பெண்கள் பகுதி

# எச்சரிப்பை வெறுத்தவள்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

"**ஸ்**திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை" என்று மத்11:11ல் வாசிக்கிறோம். நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன் பிறந்து அவருக்கு வழியை ஆயத்தம் பண்ணினவன் இவன். மனந்திரும்புங்கள், பரலோக இராஜ்யம் சமீபமாய் இருக்கிறது என்று சத்தமாய் பிரசங்கித்தவன் இந்த யோவான் ஸ்நானன். இவன் இயேசுகிறிஸ்துவைப்பற்றிக் கூறும்போது, "என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார். அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல..." என்று கூறுகிறான். அதோடு இயேசு கிறிஸ்துவுக்கு யோர்தான் நதியில் ஞானஸ்நானம் கொடுத்தவனும் இந்த யோவானே [மாற்கு.1:9] இந்த மாபெரும் மனிதனுடைய உயிர் நம்மைப்போன்ற ஒரு பெண்ணின் கைக்கு இரையானது என்பதை நினைக்கும்போது வேதனையாய் உள்ளது.

யார் இந்த பெண்? மாற்கு.6:17-28 வரையுள்ள வசனப்பகுதிகளில் இவள் உள்ளாள்.ஏரோது தன் சகோதரன் பிலிப்புவின் மனைவியை தனக்கு மனைவியாக்கிக்கொண்டான். அவள் பெயர் ஏரோதியாள். ஏரோது செய்த இந்த தவற்றை யோவான் ஸ்நானகன் சுட்டிக்காட்டி, அது நியாயமல்லவென்று கூறுகிறான். இதனால் ஆத்திரமடைந்த ஏரோது யோவானைக் கட்டிக் காவலில் வைத்து விடுகிறான். ஆனால், யோவான் நீதியும், பரிசுத்தமுள்ளவனென்று ஏரோது அறிந்து அவனுக்குப்பயந்து, அவனைப் பாதுகாத்து, அவன் யோசனையின்படி அநேக காரியங்களைச் செய்து, விருப்பத் தோடே அவன் சொல்லைக் கேட்டு வந்தான்.

இந்த ஏரோது தன் பிறந்த நாள் விழாவின்போது தன்னுடைய பிரபுக்களுக்கும், சேனாதிபதிகளுக்கும், கலிலேயா நாட்டின் பிரதான மனுஷருக்கும் ஒரு விருந்து பண்ணினபோது, ஏரோதியாளின் குமாரத்தி சபையில் நடனம் பண்ணி, பந்தியிருந்தவர்களை சந்தோஷப்படுத்தினாள். அப்போது ராஜா உனக்கு என்ன பரிசு வேண்டும்? ராஜ்ஜியத்தில் பாதி கேட்டாலும் அதை உனக்கு தருவேன் என்று கூறினான். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஏரோதியாள் தன் மகளிடம் யோவான் ஸ்நானகனுடைய தலையைக் கேள் என்று கூறி, அவளை சிரச்சேதம் செய்வதற்கு வழி வகுத்தாள்.

இவளின் வஞ்சக வார்த்தைகளைக் கேட்டு ஏரோது பாவஞ்செய்தான். அவனைக் காவல் பண்ணினாலும், அவன்மேல் பட்சமுள்ளவனாயிருந்தான். யோவான் நீதியும், பரிசுத்தமுள்ளவனென்று அறிந்திருந்தபடியால் ஏரோது தைரியமுள்ளவனாய் செயல்பட அஞ்சினான். ஆனாலும், பிரபுக்களுக்கும், சேனாதிபதிகளுக்கும் மத்தியில் அவன் வாக்குக் கொடுத்து விட்டபடியால், தன்னுடைய கௌரவத்தை தற்காத்துக்கொள்வதற்கு அவள் வேண்டுகோளை நிறைவேற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. ஏரோது மன்னனின் யோசனையில்லாத வாக்குறுதியில் ஒரு நீதிமானின் தலை துண்டிக்கப் பட்டது எவ்வளவு கொடுமை.

ஏரோதியாள் தன்னை தவறு என்று சுட்டிக்காட்டிய தேவ மனுஷனை வெறுத்தாள். தன் பாவத்தைச் சுட்டிக்காட்டும்போது அதை ஏற்றுக்கொள்ள மனம் அற்றவளாய் இருந்தாள். இன்றைக்கும் அநேக பெண்கள் தேவனுடைய வார்த்தையை கூறும் தேவமனிதர்களை வெறுக்கிறார்கள். வசனம் தங்களை எச்சரிக்கும்போது முழுப்பகையாய் அவர்களைப் பகைக்கிறார்கள். இங்கு ஏரோதியாள் தான் பாவம் செய்வதோடு அல்லாமல் தன் மகளையும் அதற்கு உடன்பட வைக்கிறாள். ஒட்டு மொத்த குடும்பமே கொலைகாரர்களாகிவிடுகிறார்கள்.

இன்றைக்கும் அநேக பெண்கள் தங்கள் பிள்ளைகளை சபைக்கு விரோதமாய் எழுப்பி செயல்பட வைக்கிறார்கள். ஆதியிலிருந்தே நாம் பார்க்கும்போது தேவனுக்கு கீழ்ப்படியாமல் போகும் போது அது கொலையில் தான் போய் முடிகிறது. ஏவாள் தேவனுக்கு கீழ்ப்படியாமல் போனபோது பாவம் உலகில் பிரேவசித்தது. அதன் தொடர்ச்சியாக சகோதரனே, அவன் சகோதரனை கொலை செய்யும்படியான சூழ்நிலை உருவெடுத்தது (ஆதி.4:8).

ஏரோதியாள் இவ்வாறு செயல்படக்காரணம் தான் செய்து கொண்டிருந்த பாவத்தை விட்டு விட மனதில்லாததுதான். இன்றும் நம்மில் அநேகர் ஆவிக்குரிய வகையில் பிசாசோடு ஜீவித்துக் கொண்டிருக்கிறோம். வசனம் நம்மை எச்சரிக்கிறது. தேவ மனிதர்கள் நம்மை வசனத்தை கொண்டு எச்சரிக்கிறார்கள். எத்தனை பேர் ஏற்றுக்கொள்கிறோம்? இந்த ஏரோதியாள் பாவத்தை நேசித்தாள். தேவ மனிதனை பகைத்தாள். இதை வாசிக்கும் அன்பான சகோதரியே! நாமும் கூட வேதாகமம் நம்மை எச்சரிக்கும்போது, கோமுபம், எரிச்சலும் கொள்ளாமல்

தாழ்மையோடு அதை ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிந்து, இரட்சிப்பைப் பெறுவோம். எதிர்த்து நின்று தேவ கோபாக்கினையைப் பெற்றுக்கொள்ள வேண்டாம்.

அடுத்து, ஏரோதியாள் தன் மகளையும் தன் தவறுகளுக்குக் கூட்டாளியாக்கிக் கொள்கிறாள். இன்று அநேக தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு தவறான கருத்துக்களை போதித்து அவர்களுடைய நல்வழியை திசைதிருப்பி விடுகிறார்கள். சமுதாயத்திலும், சபையிலும் இதனால் அநேக இடையூறுகள் நேரிடுகின்றன. உண்மையான சத்தியத்தை பரப்புவதற்கு பெற்றோர்கள் தடையாக மாறிவிடுகிறார்கள். அநேக பெற்றோர் கள் தங்கள் தீய நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்குத் தங்களின் பிள்ளைகளின் செல்வாக்குகளையும், பதவிகளையும், பயன்படுத்திக் கொள்கிறார்கள். பிரபல்யம் அடைய வேண்டும் என்ற ஆசையில் பிள்ளைகளை நடனப்பயிற்சி, மற்றும் களியாட்டுகளைக் கற்றுக் கொள்ளவும் உற்சாகப்படுத்துகிறார்கள். பெற்றோர்களே பிள்ளைகளுடைய வாழ்கையை எவ்வாறு பாழ்படுத்தி அழிவான பாதையில் இட்டுச் செல்கின்றனர், என்று ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.

தாய்மார்களே, நம்முடைய பிள்ளைகளுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு நாம் தடையாக உள்ளோமா ? இந்த ஏரோதியாளைப் போல நாம் செயல்பட கூடாது மாறாக நம் பிள்ளைகளை கர்த்தருக்க கா ஒப்பக்கொடுப்போம். தேவ ஊழியர்களை தாங்கும்படி செய் வோம், அப்போது நம்பிள்ளைகள் ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்வார்கள்.

தேவனுடைய மனுஷனை கொலை செய்தாள் என்ற பழிக்கு காரணமாயிருந்தவள் இந்த ஏரோதியாள் என்ற சொல் காலத்திற்கும் அழியாமல் உள்ளது. தயவுசெய்து நாம் இப்படிப்பட்ட அநியாயமான செயலுக்கு நம்மை ஒப்புக்கொடுக்காமல், அமைதலும், சாந்தமும் உள்ள இருதயத்தோடு சத்தியம் நம்மை எச்சரிக்கும்போது அதை பக்குவமாய் ஏற்றுக்கொண்டு பாவத்தை விட்டு, பரிசுத்தமாய் ஜீவிப்போம்.

நம் பிள்ளைகளையும் கர்த்தருடைய காரியத்தில் பங்கேற்கச் செய்வோம். அவர்கள் எதிர்த்து நிற்க நாம் ஒருபோதும் அனுமதி தரவே கூடாது. பிள்ளைகளோடு சேர்ந்து வசனத்தை ஏற்றுக்கொண்டு சபையை தாங்குவோம். சத்தியத்திற்காய் வைராக்கியமாய் இருப்போம்.

வாலிபர் பகுதி

# சாக்கு போக்கு சொல்ல இடமில்லை.

Dr. **ஏபில் நாயகம்**

கிறிஸ்துவின் மரணத்தைவிட அவரது பிறப்பே முக்கியம் என்று நம்பிக்கை கொண்டிருக்கும் உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வாரத்திற்கு ஒரு நாள் நாங்கள் கிறிஸ்தவர்கள் என்ற சிலரின் நிலையையே மோசமென்று நினைத்து வேதனைப்படுக்கையில், வருடத்திற்கு ஒருமுறை நாங்கள் கிறிஸ்தவர்கள் என்று தங்களை காட்டிக் கொள்பவர்களைப் பார்த்தால் என்ன சொல்வது என்றே தெரியவில்லை. கிறிஸ்துவின் மரணத்தினால் கிடைக்கும் இரட்சிப்பின் நிறைவான சந்தோஷத்தை பெற்றுக் கொள்ளாமல், அவரின் பிறப்பை மட்டுமே நாடி குறைவான சந்தோஷத்தைத் தானே இன்று பலர் தேடுகிறார்கள்!

இப்படிப்பட்டவர்களுக்கு மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அப்படியானால் நாம் செய்ய வேண்டுவதென்ன? உண்மையையும், மேன்மையையும் அறிந்த நம்மிடம் தேவன் எதிர்பார்ப்பது என்ன? கிறிஸ்துவின் பிறப்பின் செய்தியை தேவ தூதன் மூலம் கேட்ட மந்தை மேய்ப்பர்கள், அதை பிரசித்தம் பண்ணினார்கள் என்று நாம் வாசிக்கிறோம். அப்படியானால்,அவருடைய மரணத்தின் விசேஷத்தையும் உயிர்த்தெழுதலின் மேன்மையையும் அறிந்த நாம் அதை பிரசித்தம் பண்ண வேண்டாமா? கட்டளையிடப்படாத கிறிஸ்துவின் பிறந்த தினத்தை கொண்டாடுபவர்கள், கட்டளையிடப்பட்ட முக்கியமான பல காரியங்களை கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டும். இந்த நிலை மாற நாம் ஒவ்வொருவரும் உதவ வேண்டுவது அவசியம்.

வாலிபர்களாகிய நம்மிடமும் அந்த பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது. தவறான எண்ணமும் புரிதலும் உள்ளவர்களிடம் உண்மை சத்தியத்தை நாம் சொல்ல வேண்டும். ஆனால் இன்று நம்மில் பலர் சாக்குப்போக்குச் சொல்லி அந்த பொறுப்பை தட்டிக் கழிக்கின்றோம்.

தேவன் எரிகிற முட்செடியின் வழியாய் மோசேயை சந்தித்த போது, எகிப்தியரின் அடிமைத்தனத்திலிருக்கும் இஸ்ரவேல் ஜனங்களை மீட்கும் பணியை மோசேக்கு கொடுத்தார். ஆனால் மோசேயோ தான் அந்த வேலைக்கு ஏற்றவன் இல்லை என்பதை சாக்குப் போக்கினாலே தேவனிடம் சொல்வதை நாம் அறிந்திருக்கிறோம். தேவனுக்கும் மோசேக்கும் நடந்த இந்த உரையாடலிருந்து நாம் சில பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

எப்படியாக மோசேக்கு எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேல் ஜனங்களை மீட்கும் பொறுப்பு கொடுக்கப்பட்டதோ அதைப்போல நமக்கும் பாவத்தின் அடிமைத்தனத்திலிருப்பவர் களையும், அறியாமையில் இருக்கிறவர்களையும் மீட்கும் பணி கொடுக்கப்பட்டுள்ளது.

மோசே தேவனிடம் சொன்ன முதல் சாக்குபோக்கு நான் எம் மாத்திரம்? என்பது. (யாத்.3:11). இதை மோசே சொல்லும்பொழுது அவன் மேய்ப்பனாக இருந்தான் எண்பது வயதை கடந்து விட்டார். அவர் எகிப்திலிருந்து வெளியே வந்து 40 ஆண்டுகள் கடந்து விட் டது. எனவே, இந்த வேலைக்கு நான் சரியான நபரா? என்ற கேள்வி யும் சந்தேகமும் மோசேக்கு ஏற்ப்பட்டிருக்கும். ஆனால், தேவனின் பதில் என்னவாயிருந்தது? யாத் 3:12ல் நான் உன்னோடு இருப் பேன்? இந்த பதில் மட்டுமேபோதுமானதாயிருந்திருக்கும். ஏனென் றால், தேவன் நம் பட்சத்தில் இருந்தால் நமக்கு விரோதமாய் இருப்ப வன் யார் என்று ரோமர் 8:31ல் வாசிக்கிறோம். மோசேயைப் போல இன்னும் நம்மில் பலர் இந்த சாக்குப்பபோக்கைத்தான் சொல்கி றோம். ஜனங்களின் அறியாமையைப் போக்க என்னால் முடியுமா என்று மலைத்து நிற்கிறோம். இயேசுவின் சீடர்களைப் பாருங்கள், படிப்பறிவில்லாத பேதுரு தைரியமாகவும் அதிகாரத்தோடேயும் பேச முடிந்தது. மத் 28:20 ல் இயேசு கிறிஸ்துவின் மூலம் அதே வாக்குத் தத்தம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவதாக, யாத் 3:13 ல் அவர்களுக்கு நான் என்ன சொல் லுவேன்? என்ற சாக்குப்போக்கை மோசே சொல்கிறான் எகிப்து தேசத்திற்கு மீண்டும் சென்று ஜனங்களை விடுதலையாக்கும்படி வந்தேன் என்ற சொன்னால் பல கேள்விகள் கேட்கப்படும் என்பதை மோசே அறிந்திருந்தான். தேவன் அதற்கும் பதில் வைத்திருந்தார். யாத் 3:14-22 வரை நாம் தேவனுடைய பதிலை வாசிக்க முடியும். ஒருவேளை என்னுடைய அறிவு குறைவு என்றும், பாவத்தின் பிடி யிலும் அறியாமையிலும் இருக்கும் ஜனங்களிடம் என்ன சொல்ல வேண்டும் என்றும் தெரியாமலிருப்பதை நாம் சாக்காகக் காட்டுகி றோமா? தேவன் நமக்குப் பதிலை ஆயத்தமாக வைத்திருக்கிறார். 1கொரி 15.1-4 ஐ வாசிக்கும்பொழுது சுவிசேஷம் என்றால் என்ன? என்பதை பவுலின் மூலம் நமக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார். என வே, என்ன சொல்ல வேண்டும் என்று எனக்கு தெரியாது என்ற சாக்கு போக்கை நாம் சொல்ல இயலாது.

இப்படியாக, மேலும் மூன்று சப்பைக்காரணங்களை மோசே தேவனிடம் சொன்னார். தனக்கு செவிகொடுக்க மாட்டார்கள் என்றும், தான் திக்குவாயும் மந்தநாவும் உள்ளவன் என்றும் வேறு ஒரு நபரை அனுப்பும் என்றும், சாக்கு போக்கு காட்டினார். ஆனால்,

மோசேயின் எல்லா சாக்குபோக்கிற்கும் தேவன் பதில் கொடுத்தார். யாத். 4:14 ல் தேவன் மோசேயின் மீது கோபமானார் என்று வாசிக்கிறோம். உடனே மோசே தேவனுடைய அழைப்பை ஏற்றுக் கொண்டு இஸ்ரவேல் ஜனங்களை மீட்கும்படி தேவனுடைய அழைப்பிற்குக் கீழ்ப்படிந்தார்.

பிரியமானவர்களே! ஏற்கனவே சொல்லப்பட்டது போல பாவத்தின் பிடியிலிருக்கும் ஜனங்களிடம் நாம் அனுப்பப் பட்டிருக்கிறோம். அறியாமையில் இருப்பவர்களுக்கு மெய்யான சத்தியத்தை சொல்லும் கடமையும், பொறுப்பும் நம்மிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

அந்த பொறுப்பை நிறைவேற்றுவதே நம் பங்கில் சரியான ஒரு செயல். மாறாக, அதை செய்யாமலிருக்க சாக்குப்போக்குகளை நாம் தேடினால் தேவன் நம்மீதும் கோபம் கொள்வார். அதுமட்டுமல்ல தொடர்ந்து கிறிஸ்துவின் பிறப்பையும், மரணத்தையும் சரியாக புரிந்து கொள்ள முடியாமல் பல ஆத்துமாக்கள் அழிந்து போவதற்கு நாம் காரணமாகிவிடுவோம். எனவே, சாக்குப்போக்கு சொல்ல நமக்கு இடமில்லை. மாறாக, நம் பொறுப்பை சரிவர நிறைவேற்றுபவர்களாக வாழ நம்மை ஒப்புக்கொடுப்போம்.

---

**தேவனிடத்தில் பிரதிபலன் யாருக்கெல்லாம் கிடையாது :**

1. மனிதரின் புகழ் விரும்பி தர்மம் செய்வோர் – (மத்தேயு 6:1,4)
2. மனிதரின் புகழ் விரும்பி ஜெபிப்போர்கள் – (மத்தேயு 6:5,6)
3. மனிதரின் புகழ் விரும்பி உபவாசிப்போர்கள் – (மத்தேயு 6:16–18)
4. அன்பு இன்றி அரிய செயல்கள் பல ஆற்று வோர்கள் – (1 கொரி 13:1–3)
5. நாவை அடக்காத தேவ பக்தி உடையவர்கள் – ( யாக் 1:24)

## சிறுவர் பகுதி
## ஏன் நான் மட்டும் ?

Dr. *பிரெய்ஸி*

ஹாய் குட்டீஸ், நீங்கள் எல்லோரும் பள்ளியில் மகிழ்ச்சியாக இருப்பீர்கள் என்று நம்புகிறோம். பள்ளியில் நீங்கள் விளையாடுவீர்கள், படிப்பீர்கள், பரீட்சை எழுதுவீர்கள், நிறைய நண்பர்களைப் பெறுவீர்கள், குழு அமைப்பீர்கள், அதேபோல் நிச்சயமாக சிறுசிறு சண்டைகளும் உங்கள் மத்தியில் காணப்படும். நாமெல்லாரும் பரீட்சை காலங்களில் பரீட்சை ஒத்திவைக்கப்படவேண்டும் என்பதற்காக மழைக்காக ஜெபிப்போம். இப்படிப் பட்ட பள்ளி நினைவுகள் எல்லாம் பசுமையாகவே இன்றும் நம் மனிதில் நிற்கிறது.

பரீட்சையில் கேள்வித்தாள் கடினமாக இருந்தாலோ, அல்லது பரீட்சை முடிவுகள் எதிர்பார்த்தபடி அமையாவிட்டாலோ, குடும்பத்தாரோடோ அல்லது நண்பர்களோடோ ஏதாவது பிரச்சனை ஏற்பட்டாலோ உங்களுக் குள்ளே ஏற்படும் அல்லது எழும் கேள்வி எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது என்பதாயிருக்கிறது.

அருமையான பிள்ளைகளே, இம்மாதம் நாம் எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது ? என்னும் தலைப்பின் கீழ் நாம் காரியங்களை பார்க்கப்போகிறோம். I கொரிந்தியர் 10:13 ல் நாம் மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல், வேறே சோதனை உங்களுக்குநேரிடவில்லை என்று வாசிக்கிறோம். எனவே, எது நமக்கு நேரிடுகிறதோ அது உலகத்தில் நம்மைச்சூற்றியிருக்கிற எல்லா மனிதர்களுக்கும் நடக்கிறது. அடுத்த முறை உங்களிடையே ஏதாவது துன்பம் ஏற்படும்போது உங்களுக்கு மட்டும் தான் இது ஏற்படுகிறது என்று நினைக்காமல் துன்பம் நீங்கவேண்டும் என்பதற்காக தேவனிடம் விண்ணப்பம் பண்ணுங்கள்.

எப்போதும் ஜெபம் பண்ணுங்கள், அனுதினமும் தேவனுடைய வார்த்தையை வாசியுங்கள், வாசித்து உங்களை பலப்படுத்திக் கொள்ளுங்கள். பரீட்சையை எதிர்கொள்ளவும், வாழ்க்கையின் எல்லா உபத்திரவங்களையும், சோதனைகளையும் எதிர்கொள்ளவும் முன்கூட்டியே ஆயத்தமாகிவிடுங்கள். நல்ல பிள்ளைகளாக இருந்து தயாராக இருங்கள்

**அன்புடன்,**
**உங்கள் பிரெய்சி அக்கா.**

## கேள்விகள் :

1. மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல், புதிதான சோதனை ஏதாவது நமக்கு உண்டா ?
2. நாம் சோதனைகளையும், உபத்திரவங்களையும் எதிர்கொள்ளும் போது எப்படி நடந்துகொள்ள வேண்டும் ?
3. சோதனைகளைப்பற்றி யாக்கோபு 1ல் என்ன சொல்லப் பட்டிருக்கிறது ?
4. வாழ்க்கையில் நீங்கள் எதிர்கொண்ட மிகப்பெரிய பிரச்சனையாக எதை நினைக்கிறீர்கள் ?
5. அந்தப் பிரச்சனைகளை நீங்கள் எப்படி எதிர்கொண்டீர்கள் ?

## நாளும் நடப்பும்

1. உலகளவில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 54.16 கோடியாக அதிகரிப்பு.
2. 2 ஆண்டுக்கு பின் இந்தியர்கள் மீதான விசா தடை நீக்கியது சீனா.
3. உலகின் அதிவேக சூப்பர் கம்ப்யூட்டர் என்ற பெருமையை பெற்றுள்ளது அமெரிக்காவின் "Frontier" !
4. தமிழ்நாடு முழுவதும் இம்மாதம் 13 ஆம் தேதிலிருந்து 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பள்ளிகள் ஆரம்பம்.
5. இந்தியா, தென் ஆப்ரிக்கா இடையே 20 ஓவர் போட்டி விறுவிறுப்பாக நடந்து கொண்டிருக்கிறது.

# நாம் எவ்வளவு ஆவிக்குரியவர்களாயிருக்கிறோம்?

## Bro. பென்னி மார்ட்டின்

அன்பான திருமறை ஆசான் வாசகர்களுக்கு அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். பரபரப்பும், விறுவிறுப்பும் நிறைந்த இந்த நாட்களிலும் கூட நாம் ஆவலுடன் ஆவிக்குரிய தன்மைப்பற்றி அதிகமாகப் பேசுகிறோம். இன்றைய நாட்களில் கிட்டடத்தட்ட எல்லோருமே ஆவிக் குரியவர்களாக விரும்புவதுபோல் தெரிகிறது. இன்னும் சிலர் தங்களை ஆவிக்குரிய ஜீவிகளாக அடையாளப்படுத்திக் கொண்டு, ஆவிக்குரிய காரியங்களில் தங்களுக்கு அதீத அக்கறை இருப்பதாக அலட்டிக் கொள்கிறார்கள். நிச்சயமாகவே அவர் களுடைய ஆவிக்குரிய தன்மை பல நிலைகளையும், பல உருவங்களையும் கொண்டுள்ளது. மனித வரலாற்றில் அதிக ஆவிக்குரியவர்களாயிருக்க பல முயற்சிகள் எடுக்கப் பட்டிருக்கின்றன. பொதுவாக பார்த்தால் நவீனகால ஆவிக்குரிய தன்மையைப் பொறுத்தவரை அது உணர்வுப்பூர்வமான காரியங்களுக்கு அதிக அழுத்தம் கொடுக்கிறதாகவே இருக்கிறது. தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் ஆவிக்குரிய தன்மை உடையவர்களாயிருக்க வேண்டுமென்று ஆரம்பத்திலிருந்தே நம் பரமப் பிதாவால் எதிர்பார்க்கப்படுகிறோம். ஆனால், நம் ஆவிக்குரிய தன்மை வேத வசனங்களை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். ஆவிக்குரிய தன்மைக்கு உலகம் கொடுக்கிற விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கக்கூடாது. நாம் ஆவிக்குரியவர்களாயிருக்க வேண்டுமென்று அநேக வசனங்கள் பேசுகின்றன. ஆனால் சில நிமிடங்களுக்கு பிலிப்பியர் 1:9–11 வசனங்களை நாம் ஆழ்ந்து சிந்திப்போம். ஒரு வேதவல்லுநர் இவ்வசனப் பகுதியை ஆவிக்குரிய தன்மையின் எவரெஸ்ட் சிகரம் என்றழைக்கிறார்.

மேலும், உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக் கொள்ளத் தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும், எல்லா உணர்விலும் இன்னும் அதிகதிகமாய்ப் பெருகவும், தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசு கிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி, நீங்கள் கிறிஸ்துவின் நாளுக் கென்று துப்புரவானவர்களும், இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன்.

இவ்வசனங்களை நாம் சற்று உற்றுப் பார்க்கும்போது உண்மையாக ஆவிக்குரிய தன்மை உடையவர்களாயிருப்பதற் கான பவுலின் வழி நம் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டதுதான் என்பது நமக்கு விளங்குகிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பி பட்டணத்து கிறிஸ்தவர்கள் அன்பிலே பெருக வேண்டுமென்று ஜெபித்தார். இது உணர்வுப் பூர்வமான அன்பல்ல, இந்த அன்பு யாரிடத்தில் செலுத்தப்படு கிறதோ அவர்களுக்கு சிறந்ததையே வாஞ்சிக்கும் Agape அன்பாகும். இந்த அன்பு தேவனுக்கான அன்பாகும். தேவனுக்கான அன்பு எப்போதுமே அவருடைய சித்தத்தை உள்ளடக்கியதாகும். இயேசு கிறிஸ்து ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தை கைக்கொள்ளுவான் என்றார் [யோவான் 14:23].

## I. அன்பில் நாம் அதிகமாய் பெருக வேண்டும்

அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பி பட்டணத்து கிறிஸ்தவர்கள் அன்பில் பெருக வேண்டுமென்று ஜெபித்தது மட்டுமல்லாமல் அவர்கள் அறிவிலும் பெருக வேண்டுமென்று ஜெபித்தார். இந்த அறிவு தேவனைப்பற்றி சில உண்மைகளை அறிந்து கொள்வதை மட்டும் குறிக்காது. இது நாம் தேவனை தனிப்பட்ட முறையிலும், நெருக்கமான முறையிலும் அறிந்து கொள்ளும் அறிவைத்தான் குறிக்கிறது. நாம் தேவனை எந்த அளவுக்குப் புரிந்து கொள்ளுகிறோமோ அந்த அளவுக்கு கிறிஸ்தவர்கள் என்னும் நிலையில் நாம் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ள வேண்டிய பொறுப்புகள் இருப்பதை நம்மால் காண முடிகிறது. இந்த அறிவு தேவனுடைய வார்த்தைகளை நாம் படிப்பதன் மூலமாகவும், தியானிப்பதன் மூலமாகவும் வருகிறது. மேலும், ஆவிக்குரிய தன்மை என்பது ஒருவர் என்ன உணர்கிறாரோ அதுவல்ல, மாறாக ஒருவர் எதை சிந்தித்து செயல்படுகிறாரோ அதுதான் என்பதை நம்மால் காணமுடிகிறது.

அடுத்ததாக, பவுல் அவர்கள் உணர்வில் அதிகமாய்ப் பெருக வேண்டுமென்று ஜெபித்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், மூலமொழியில் பகுத்தறிவில் அவர்கள் பெருக வேண்டு மென்பதற்காக பவுல் ஜெபித்தாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. உண்மையான ஆவிக்குரிய தன்மை என்பது ஒழுக்கரீதியாக எது சரி என்பதை பகுத்தறிய கூடியது. எபிரெய ஆசிரியர் 5:14 ல் பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்க முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களை யுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும் என்று எழுதின போது இக்கருத்தை மனதில் கொண்டுதான் எழுதியிருக்கிறார். உண்மையான ஆவிக்குரிய தன்மை என்பது வெறுமனே எது சரி, எது தவறு என்பதை அறிந்து கொள்வது மட்டுமல்ல, எது மேலானது எது சிறந்தது என்பதை தீர்மானிப்ப தாயிருக்கிறது. எல்லா சரியான செயல்பாடுகளும் நல்லவைகளாக இருப்பதில்லை, சில செயல்பாடுகள் நன்மையை ஏற்படுத்து வதற்கு அதிக வாய்ப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளபடியால் கிறிஸ்தவர்கள் அவைகளை நாடித்தேட வேண்டும்.

## II நாம் கிறிஸ்தவ பண்புகளில் பெருக வேண்டும்

தேவனுடைய பிள்ளைகள் நாங்கள் என்று பெருமைப் பாராட்டுகிற நாம் உண்மையான நம்பத்தகுந்த குணாதியசங்களைப் பெற்றிருக்க வேண்டும். இதன்பொருள் கிறிஸ்தவர்கள் ஒருபோதும் பாவம் செய்வதில்லையென்றோ அல்லது மற்றவர்கள் நம் மீது குற்றஞ்சாட்ட முடியாது என்றோ பொருள்படுவதில்லை. இயேசு கிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் கூட சில வேளைகளில் அநியாயமாக குற்றஞ்சாட்டப்பட்டார்கள் ஆனால் அவர்கள் குற்றஞ் செய்தார்கள் என்று ஒருபோதும் நிரூபிக்கப்படவில்லை. பிரியமானவர்களே, நம் கிறிஸ்தவமார்க்கம் வெளிப்படையான காட்சிப்பொருளாக இருக்கக்கூடாது. நாம் ஆவிக்குரியவர்களாக நடிக்கக் கூடாது, உண்மையாகவே அப்படி இருக்க வேண்டும். சில கிறிஸ்தவர்கள் தங்கள் ஜீவியங்களில் காணப்படும் சிறிய தவறை அல்லது பாவத்தைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள். நம் எல்லோரிடமும் தவறுகளும், குறைகளும் உண்டு என்பது உண்மைதான். ஆனால், அவைகளை நாம் முக்கியமற்றவைகள் என்று கண்டு கொள்ளாமல் இருந்துவிடக்கூடாது. நம் சிந்தனையிலும் செயலிலும் கிறிஸ்துவைப்போல வாழ பாடுபட வேண்டும். அடுத்ததாக நாம் கனிகொடுப்பதில் வளர வேண்டும். கிறிஸ்து தம்முடைய சீஷர்கள் மிகுந்த கனிகளைக் கொடுக்க வேண்டுமென்று கட்டளையிட்டார். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள் (யோவான் 15:8). ஓர் உண்மையான ஆவிக்குரிய மனுஷன் கனி கொடுப்பதில் தொடர்ச்சியாக வளரச்சி அடைவதையே நாடுவான்.

உண்மையான ஆவிக்குரிய தன்மை என்பது வேத வசனங்களின்படி நம் செயல்களை அடிப்படையாகக் கொண்டதாகும். நிச்சயமாகவே நம் உணர்வுகள் அதில் ஈடுபடுத்தப்பட்டிருந்தாலும் அவைகள் பிரயோஜனமுள்ளதாயிருக்க வேண்டுமென்றால் அவைகள் கிரியைகளாக மாற்றப்பட வேண்டும்.

உண்மையான கிறிஸ்தவத்தன்மை கிறிஸ்தவர்களிடையே கிரியைகளில் வெளிப்படவில்லை என்றால் அது கிறிஸ்தவ தன்மையே அல்ல. அது போலியான ஒன்றாகத்தான் இருக்கும். எப்படி போலிப் பணத்தை நாம் விரும்புவதில்லையோ அதேபோல் போலியான அல்லது மாயையான ஆவிக்குரிய தன்மை என்னும் வஞ்சக வலையிலும் விழுந்துவிட வேண்டாம், ஆவிக்குரிய தன்மையில் குறைவு பட்டு தேவனுடைய நாமத்தை வீணில் வழங்கிடவும் வேண்டாம்.

## விரோதிகளை ஏன் தேவன் அனுமதிக்கிறார் ?

**- பாண்டியன்**

நீங்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும்; உங்களுக்கு ஆகாதவர்கள், பிடிக்காதவர்கள், விரோதிப்பவர்கள் போன்றவர்களை வாழ்வில் நீங்கள் சந்தித்தே ஆகவேண்டும். இதில் இன்னும் வேடிக்கை காரணமில்லாமலே பகைக்கிறவர்களும் உண்டு (சங் 7:4, 119:161) தேவன் மீது வைராக்கியமான நம்பிக்கை கொண்டிருந்த தாவீது கூட தேவனிடம் ''என் சத்துருக்கள் எவ்வளவாய் பெருகியிருக்கிறார்கள் (சங் 3:1) என்று வருத்தப்பட்டார். ஆனால், சில காரணங்களோடே தான் நம்முடைய எதிரிகளை அனுமதிக்கிறார் என்பதுதான் வேதம் நமக்குக் கற்றுத்தரும் பாடமாகும். நமக்கு திருஷ்டாந்தமாக உள்ள இஸ்ரவேலர் தங்கள் மதியீனத்தை உணரவும், தேவனுடைய வல்லமையில் நம்பிக்கை வைக்கவும் பல நேரங்களில் தேவன் அவர்களைச் சத்துருக்களின் கையில் ஒப்புக்கொடுத்தார்.

கானான் தேசத்தை சென்றடைந்த இஸ்ரவேலரின் பிள்ளைகள் யுத்தங்கள் நடந்த விதத்தை அறியாதிருந்தனர். அவைகளை அறியும் படி பழக்குவிப்பதற்காவும் தேவன் சில எதிரிகள் விட்டுவைத்தார் (நியாய 3:1-4) காரணம் ஏற்கெனவே தேவன் இவர்களுடைய பிதாக்களுக்குக் கொடுத்த கட்டளைகளுக்கு கீழ் படிவார்களோ என்று அறியும்படி சோதிப்பதற்காக விரோதிகள் தேவனால் விடப்பட்டிருந்தார்கள். தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கு கிறிஸ்துவின் உபதேசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்படி நாம், தாழ்மையாக, சந்தமாக, தீமையோடே எதிர்த்து நிற்காதவர்களாக நடந்து கொள்கிறோமா என்பதை அறியும் படியும் நமக்கு விரோதிகள் அனுமதிக்கப்படலாம். நம் விசுவாசத்தை நாம் நம்முடைய கிரியைகளில் காண்பிக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உள்ளது. இந்தக்காரத்திணத்திற்காக சத்துருக்களை நம் வாழ்வில் கடந்து செல்ல நேரிடலாம் என்பதை அறிந்து வாழ்வோம்.

பிரதானக்காரணமாக தேவஜனங்கள் தங்கள் தேவனை மறந்து அந்நிய தெய்வங்களை நாடிய போது விரோதிகள் அனுமத்திக்கப்பட்டார்கள்.

முன் கூட்டி தேவன் எச்சரித்துச் சொல்லியிருந்தார் [யோசு 24:20] அப்படியிருந்தும் அவர்கள் விக்கிரக ஆராதனை செய்த படியால் தேவன் அவர்களை விட்டு விலகி சத்துருவின் வசம் ஜனங்களை ஒப்படைத்தார் [1 சாமு 7:2–4] இப்போது நாம் ஒருவேளை நேரடியாக விக்கிரக செய்யாதவர்களாக இருக்கலாம் ஆனால் தேவனை ஆராதனை விட உலகப் பொருளுக்கு முக்கியத்துவம் தரும்போது பொருளாசை விக்கிரக ஆராதனைக்குச் சமமாக இருக்கிறது என்கிறது வேதம் [எபேசி 5:5] அதேபோல விபச்சாரமும் விக்கிரக ஆராதனைக்கு ஒப்பானது என்று தேவன் ஏற்கெனவே எச்சரித்துள்ளார். தேவனுக்கு கீழ்படியாமல் முரட்டாட்டம் பண்ணுதலும் அதற்குச் சமம் என்கிறது வேதம் [ 1 சாமு 15:23]

மூன்றாவதாக தேவனுடை கட்டளைகளையும் அவருடைய நியாயங்களையும் இஸ்ரவேலர் வெறுத்து, உடன் படிக்கையை மீறிப்போட்ட போது சத்துருக்கள் கையில் அவர்கள் ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள். லேவி 26:15–17. இந்தக்காரியம் கிதியோன் காலத்தில் அப்படியே நிறைவேறியது. மீதியானியர் அவர்களுடைய விளைச்சலை தின்றார்கள் என்பது எவ்வளவுக் கொடுமையான விஷயம் என்பதை சிந்தித்துபாருங்கள். ஆனால்நாம் வேதத்தை மன மகிழ்ச்சியாய் நினைத்து அதில் பிரியாமலிருக்கும்போது பிறர்முன்பாக நாம் வெட்கப்பட்டுப் போகாமல் இருக்கிற மேன்மையை தேவன் தருவார். சங் 119:6.

எந்தச் சூழ்நிலையிலும் தைரியமாக இருக்கும் மனநிலை பெற்றுக்கொள்ள தேவன் விரோதிகளையும், யுத்தங்களையம் பயன்படுத்துகிறார் [உபா 20:1–4] நமக்காக யுத்தம் பண்ணவும், ரட்சிக்கவும் நம்மோடே நம் தேவனாகிய கர்த்தர் இருக்கிறார் என்றும்; நாம் சத்துருவுக்கு பயப்படாமல் இருக்கவும், தேவன் நம் எதிரிகளை பயன்படுத்துகிறார் என்பது எவ்வளவு ஆறுதலான விஷயம். ஆண்டவர் இயேசுவும் உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக என்றும், நம்மை தைரியப்படுத்துகிறதை நாம் நினைவு கூறுகிறோம். நாம் விசுவாசமாயிருந்தால் ஒரு வழியாய் வரும் நம் எதிரிகள் ஏழுவழியாய் ஓடிப்போவார்கள் என்பது [உபா 28:7] தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் வாக்குதத்தமாகும்.

ஐந்தாவதாக நம் சுயபெலன் ஒன்றுமில்லை என்பதை நாம் உணர எதிரிகளை தேவன் அனுமதிக்கிறார். இஸ்ரவேலர் எதிரிகளிடம் சிறைப்பட்டுபோவார்கள், எருசலேம் மண்மேடுகளாகும் என்று எரேமியா தீர்க்கதரிசனம் சொன்னபோது அவர்கள் நம்ப வில்லை.

மாறாக மேட்டிமையாக நடந்து கொண்ட அவர்களை தேவன் எச்சரித்தார். எப்படியெனில் " ஞானி" "பராக்கிரமசாலி" மற்றும் ஐசுவரியவான்கள் இவைகளைக்குறித்து மேன்மை பாராட்ட வேண்டாம், என்றும் உண்மை தெய்வத்தைத் தான் அறிந்து வைத்திருப்பதைக்குறித்தே மேன்மை பாராட்ட வேண்டுமென எச்சரித்தார் எரே 9:23,24) ஆனால், பொய்த்தீர்க்கதரிசிகளின் பேச்சைக் கேட்டு அவர்கள் நிர்விசாரமாயிருந்தனர். இப்போது நாமும் இவைகளைக்குறித்து மேன்மை பாராட்டாமலும் கள்ளதீர்க்கதரிசிகளை நம்பாமலும் தேவனைக்குறித்தே மேன்மை பாராட்டுவோமாக.

அடுத்து நாம் தேவனுடைய பார்வைக்கு ஆகாத காரியம் ஏதாகிலும் செய்தால் எதிரிகளை தேவன் அனுமதிக்கிறார். (I நாளா 21 : 7)தாவீதை இஸ்ரவேலைத்தொகையிட சாத்தான் ஏவினது போல நம்மையும் பிசாசாணவன் வழிநடத்த வாய்ப்புள்ளது (I பேது 5:8). இஸ்ரவேலர் ராஜாவை கேட்டதும் பிற்பாடு சவுல் அமலேக்கியர் விஷயத்தில் மீறினதும் கர்த்தருக்கு ஆகாத காரியங்களாகப் பார்க்கப்பட்டது.

இறுதியாக நம்மை உயர்த்திடவும் தேவன் எதிரிகளை அனுமதிக்கிறார் (சங் 37:32-34) நாம் கர்த்தருக்குக் காத்திருந்து அவருடைய வழியைக் கைக்கொள்ளும்போது உயர்த்துவார். நம் சத்துருக்களை தேவன் அழித்து நம்மை உயர்த்த தேவனாலே ஆகும் (சங் 92:9-11)ஒத்தாசை பண்ணவும், விழப்பண்ணவும் தேவனாலேக் கூடும், ( 2 நாளா 25:8) எதிரிகளும் நமக்கு இரங்கும்படி தேவன் செய்வார் 2-ம் யோசேப்பு (சங் 106:46) உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள் (I யோவா 3:13) ஆமென்.

---

## தேவனை சரியாக புரிந்துகொள்ளுங்கள்

1. பட்சபாதம் பண்ணுகிறவர் அல்ல - ( உபாகமம் 10:17)
2. பிரதானம் வாங்குகிறவர் அல்ல - ( உபாகமம் 10:17)
3. பட்டயத்தினாலும் ஈட்டியினாலும் இரட்சிக்கிறவர் அல்ல -(I சாமு 17:47)
4. துண்மார்க்கத்தில் பிரியப்படுகிறவர் அல்ல - (சங்கீதம் 5 : 4)
5. பொல்லாங்கினால் சோதிக்கிறவர் அல்ல - (யாக் 1: 13)
6. பொய் சொல்ல மனிதன் அல்ல - ( எண் 23 : 19 )
7. அநீதியுள்ளவர் அல்ல - (எபி 6 : 10 )

# கிறிஸ்து என்னும் மார்க்கம் பாடங்கள்

## ஜேம்ஸ் ராஜ்குமார்

முன்னுரை : 1. தேவன் வானத்தையும் அதின் சர்வசேனையையும், பூமியையும் அதின் சகல ஜீவராசிகளையும் படைத்தது அற்புதம், ஆதி. 1: 1 ; 2:4 ; சங். 33:6.

2. நாம் அன்றாடம் வாழ்வதும், சுவாசிப்பதும் அற்புதம், அப். 14:17 ; 17:25.

3. இதையும் தாண்டி இயற்கைக்கு அப்பாற்பட்டு ஒரு நிகழ்ச்சி நடந்தால் அவைகளை அற்புதங்களாக ஏற்றுக்கொள்ளலாம், ஆதி. 7:12.

4. ஒரு அற்புதத்தை உண்மை அல்லது பொய்யாக எவ்வாறு மதிப்பிடலாம் என்றால் அற்புதங்களைச் செய்பவர் யார்? அதன் நோக்கம் என்ன? எவ்வளவு காலத்திற்குள் நடந்தது? அதன் பிரயோஜனம் என்ன? அதற்கான சாட்சிகள் யார்? ஆகியவற்றைக்கொண்டு மதிப்பிடவேண்டும்.

1. பழைய ஏற்பாட்டு காலத்தில் நடந்த அற்புதங்களின் தன்மையும் நோக்கம் :

அ. மோசேயையும், ஆரோனையும் தேவன் அனுப்பினார் என்றும் அதை பார்வோன் ஏற்றுக்கொண்டு, அவருடைய மக்களை விடுதலை செய்யவேண்டும். இஸ்ரவேலருக்கும் எகிப்தியர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை தேவபிள்ளைகள் அறிந்துகொண்டு, தேவனுக்குக் கீழ்படிந்து நடக்க வேண்டும், யாத். 3: 19720.

ஆ. வனாந்திரத்தில் மோசே, அதன்பிறகு யோசுவா, நியாயாதிபதிகள் மூலம் தேவன்தான் இஸ்ரவேலரை வழிநடத்துகிறார் என்பதையும் தேவனுக்கு செவிகொடுத்து, அவருடைய பிரமாணத்தைக் கைக்கொண்டு, தேவனால் ஏற்படுத்தப்பட்ட வழிநடத்துபவருக்கு கீழ்படிந்து நடக்கவேண்டும், யாத். 20: 18/20 ; 24:7 ; உபா. 34:9 ; யோசு. 24 : 14 ;நியா. 2:17.

இ. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் பேசுவது தேவனுடைய வார்த்தை என்பதை உறுதி செய்யவும், அந்த வார்த்தைகளுக்கு தேவனுடைய மக்கள் கீழ்ப்ப டிய வேண்டும், லேவி. 10:11; 26: 46எண். 12:678 ; 1இராஜா. 17: 1,16

ஈ. அதேநேரத்தில் பொய்யான அற்புதங்கள் செய்கிறவர்களுக்கு விலக தேவன் எச்சரித்தார்; தேவனால் அனுப்பப்படாத எகிப்தின் மந்திரவாதிகள் தொடர்ந்து அற்புதம் செய்ய முடியாமல் போனார்கள், யாத். 8: 16019; உபா. 13:103.

உ. மோசேயின் காலம் ஏறக்குறைய 1,500 ஆண்டுகள் அதிலே அற்புதங்கள் நடந்தது மிகவும் குறுகிய காலமே; மற்ற காலங்களில் மக்கள் தேவனுடைய நியாயப்பிரமாண சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்றுதான் தேவன் எதிர்பார்த்தார், உபா. 6:103.

ஊ. இந்த நிலைமை கிறிஸ்துவின் காலத்திற்கும் பொருந்தும். ஒரு குறிப்பிட்ட காலம் தேவன் அற்புத அடையாளங்கள் மூலம் தம் வசனத்தை உறுதிப்படுத்தினார். அதன்பிறகு கிறிஸ்துவானவர் மூலம் கொடுத்த புதிய ஏற்பாட்டு சத்தியத்திற்குக் அனைவரும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும், யோவா. 8:31232; கொலோ. 3: 16017.

II. இயேசுகிறிஸ்துவானவர் செய்த அற்புதங்களின் நோக்கம், தன்மையும்.

அ. இயேசுகிறிஸ்து தேவனால் அனுப்பப்பட்டார் என்பதை உறுதி செய்யவும்; அவரே தேவனுடைய குமாரனென்றும் நிரூபிக்கவும் அற்புதங்கள் செய்தார், யோவா. 5:36; 10:25; 20 : 3; ரோம. 1:5.

ஆ. இயேசுகிறிஸ்துவானவர் செய்த அற்புதங்களில் பெரியது எது?
1. எப்படி அற்புதங்களில் பெரியது சிறியது என்று காண்பதென்றால் அவைகளினால் உண்டான நன்மை எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதைப் பொருத்து அறியலாம்.

2. உதாரணமாக, இயேசுகிறிஸ்து தம்பிரசங்கத்தை கேட்டிருந்தவர்களுக்கு உணவு அளித்தார், அது ஒருவேளைக்கே பிரயோஜனம், மத். 14: 14021; மாற் 8: 109.

3. இயேசுகிறிஸ்து வியாதியை குணப்படுத்தியிருந்தால், மீண்டும் வியாதி வராதவரை அல்லது அவர்கள் வாழ்நாள்வரை அவர்களுக்குப் பிரயோஜனம், 2இராஜா. 5: 14; 20:506; மத். 8:103, 14, 15;9:67; யோவா. 9:607.

4. இயேசுகிறிஸ்து ஒரு சிலரை உயிரோடு எழுப்பியிருந்தாலும் அது அவர்களுக்கு மரிக்கும் வரை மட்டுமே பிரயோஜனம், 2இராஜா. 4 : 32035 ; லூக். 8 : 53055 ; யோவா. 11 : 43 44 ; அப். 9:40 ; 20:9 12.

5. ஆனால் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் என்பது நித்தியமான பிரயோஜனம். ஏனென்றால் அவர் மீண்டும் மரிப்பதில்லை , ரோம. 6:9 வெளி. 1: 18.

6. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்தான் பெரிய அற்புதம்; அதற்கு ஈடான அற்புதம் வேறில்லை ; ஏனென்றால் அதன் பிரயோஜனம் நித்தியமானது, 1கொரி. 15:14 017; 1பேது. 3: 22 அப். 17:31; யோவா. 14: 123.

III. முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் செய்த அற்புதங்களின் நோக்கம் :

அ. இயேசுவானவர் தம்முடைய சீஷர்களை தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிருப்பது குறித்து பிரசங்கிக்க அனுப்பினார். அவர்களுக்கு அற்புதங்கள் செய்யும் வல்லமையைக் கொடுத்தார். இஸ்ரவேலர் தங்களை ஆயத்தமாக்கிக் கொள்ள அது பிரயோஜனமானது, மத். 10:508 ; லூக். 9:1 ; 10:9, 1719.

ஆ. அப்பொழுது சீஷர்களின் கைகளில் வேதாகமம் இல்லை , அவர்கள் பேசவேண்டியதை பரிசுத்த ஆவியானவரால் பேசினார்கள், மத். 10: 19720.

இ. தாங்கள் பேசுகிற கிருபையுள்ள இரட்சிப்பின் வார்த்தைகள் தேவனுடைய வார்த்தை என்பதை நிரூபிப்பதற்காக அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் தேவன் சாட்சி கொடுத்தார், அப். 14:3

ஈ. தேவனுடைய சித்தத்தின்படி இரட்சிப்பின் வசனத்தை உறுதி செய்வதற்காக அற்புதம், அடையாளம், பலத்த செய்கைகள் மூலமாக தேவன் சாட்சி கொடுத்தார், எபி. 2:34.

உ. முதலாம் நூற்றாண்டின் இறுதிக்குள்ளாக தேவனுடைய வசனம் உறுதிசெய்யப்பட்டு, நிருபங்களாக எழுதி முடிக்கப்பட்டது, ரோம. 16:25.

ஊ. இன்றைக்கு வேதாகமம் நம் கையில் கொடுக்கப்பட்டுள்ளது, ஒருவர் இன்றைக்கு போதிக்க வேண்டுமானால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்க வேண்டும், 1பேது. 4:11.

– தொடரும்...

IV. தேவனுடைய வார்த்தைகளை நம்பாமல் அற்புத அடையாளங்களைக் கேட்பவர்களை கிறிஸ்து எப்படிப் பார்க்கிறார்? ஏன்? மத். 16: 104.

அ. அற்புத அடையாளங்களை எதிர்ப்பார்ப்பவர்களை விபச்சார சந்ததியார் என்று இயேசுவானவர் கடிந்துகொள்ளுகிறார், மத். 16:4.

ஆ. நமக்காகக் கொடுக்கப்பட்டது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் என்கிற அடையாளமே.

இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனாக நிரூபித்த உயிர்த்தெழுதலை விசுவாசித்தால் நாம் ஏற்கனவே நிரூபிக்கப்பட்ட சத்தியத்தை மீண்டும் நிரூபிக்க அற்புதத்தைக் கேட்கமாட்டோம், மத். 12:38 41; ரோம. 1:5.

இ. இன்றைக்கு நம்மை இரட்சிப்பது கிறிஸ்துவின் மரணம் அடக்கம் உயிர்த்தெழுதலாகிய சுவிசேஷமே. தேவநீதி கிறிஸ்துவின் சுவிசேஷத்தினாலே வெளிப்படுத்தப்பட்டுள்ளது, அற்புதத்தினாலே அல்ல, ரோம. 1 : 16017.

ஈ. ஆகையால் இன்றைக்கு வேதாகமத்தை தேவனுடைய வார்த்தையாக நிரூபிக்கும்படி அற்புத அடையாளங்கள் செய்யவேண்டிய அவசியமில்லை; நமக்குக் கொடுக்கப்பட்டிருப்பது பூரணப்பிரமாணம், யாக். 1: 25.

உ. இரட்சிப்பின் சுவிசேஷத்தைக் கேட்டு, அதற்குக் கீழ்ப்படிந்தால், தேவன் நம்மை இரட்சித்து, அவருடைய குமாரனுடைய சபையாகிய ராஜ்யத்திலே சேர்த்துக்கொள்ளுகிறார், அப். 2.47; கொலோ. 1: 13.

## இடம் கொடுக்க கூடாது எதற்கு

1. பிசாசுக்கு இடம் கொடுக்க கூடாது – ( எபே 4:27)

2. வீண் பேச்சுக்கு இடம் கொடுக்க கூடாது – ( 1 தீமோ 1:6)

3. தேவ நாமம் தூஷிக்கபட இடம் கொடுக்க கூடாது – ( ஏசா 52:4,5)

4. உங்களுடைய நன்மை தூஷிக்கபட இடம் கொடுக்க கூடாது – (ரோமர் 14 : 16)


5. தேவ வசனம் தூஷிக்கபட இடம் கொடுக்க கூடாது – ( தீத்து 2:4,5)


6. மாம்சத்தை பாவத்துக்குள்ளாக்க வாய்க்கு இடம் கொடுக்க கூடாது – ( பிரசங்கி 5 : 6 )

## மெச்சிக் கொண்ட விசுவாசம் :

1. நூற்றுக்கு அதிபதி – (மத்தேயு 8 : 10 )
2. பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ – (மத்தேயு 9 : 22 )
3. இரண்டு குருடர் – (மத்தேயு 9 : 29 )
4. பாவியாகிய ஒரு ஸ்திரீ – (லூக்கா 7 : 50 )
5. கானானிய ஸ்திரீ – (மத்தேயு 15 : 28 )
6. பர்திமேயு – (மாற்கு 10 : 52 )
7. சமாரியனான குஷ்டரோகி – (லூக்கா 17:18,19)


## 12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும். தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

















# World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Tamilan TV
Every Saturday 7:00 - 7:30 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026



Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2021 - 2023
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Published on 17/18 th of Every Month

# எங்களது இதர வெளியீடுகள்









சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்




## திருமறை தியானம்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி

தமிழன் தொலைக்காட்சியில்
சனி காலை 7.00 - 7.30 மணி







## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.







இயக்குனர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638–701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.